வரையறுக்கப்பட்ட ஜிஎஸ்எம்பி டெக்னிக்கல் சேவிசஸ் (தனியார்) கம்பனியின் 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாரளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட வேண்டிய மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயலாற்றல் மீதான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (“சபை”) பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட ஜி.எஸ்.எம்.பி டெக்னிக்கல் சேவிசஸ் (தனியார்) கம்பனியின் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) எனது அபிப்பிராயத்தில்,

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும் மற்றும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நியமத்தின் 11:21 பிரிவின் பிரகாரம், 07 வருடங்கள் காலப்பகுதியொன்றாக செயறத்திட்டங்களிலிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 2,049,600 தொகையொன்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அதனால் ஏற்படக்கூடிய நட்டக்கழிவு நட்டத்தினை இனங்காண்பதற்கு மற்றும் அதனை கணக்குகளில் சரிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கபட்டிருக்கவில்லை.

(ஆ) நியமத்தின் 17.19 பிரிவின் பிரகாரம், கம்பனியினால் ரூபா 38,205,552 கிரயமான முழுமையாக பொறுமானத்தேய்விடப்பட்ட நிலையான சொத்துக்கள் கம்பனியினால் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தபோதிலும், நிதிக்கூற்றுக்களின் தயாரிப்புக்கு பயன்படு ஆயுட்காலம் மற்றும் இழிவுப் பெறுமதியினை மீள் மதிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நியமத்தின் 17.31(இ) பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 19,135,797 கூட்டுத்தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒவ்வொரு வகுப்பிற்கும் பயன்படு ஆயுட்காலமோ அல்லது பெறுமானத்தேய்வு விகிதமோ குறிப்புக்களினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நியமத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 2,877,114 பெறுமதியான கம்பனியின் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களினை சரிப்படுத்துவதற்கு அல்லது இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நியமத்தின் 2.52 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களினால் வேண்டப்பட்டாலொழிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் வருமானம் மற்றும் செலவினம் எதிரீடு செய்யப்படக்கூடாத போதிலும், ரூபா 47,583,439 தொகையான பொலநறுவை மாவட்டத்தில் பராமரிக்கப்பட்ட 09 மணல் செயற்திட்டங்கள் மற்றும் விற்பனை நிலையங்களின் தேறிய வருமானம் தனித்தனியாக இலாபம்/நட்டம் கணிப்பிடப்படாது நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

-----------------------------------------------

மணல் செயற்திட்டங்களிலிருந்து அகழப்பட்ட 01 கனசதுர மணலிற்கான கம்பனியின் இலாப எல்லை மீதான தொகையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் பல்வேறு மணல் செயற்திட்டங்களுக்கு பல்வேறு இலாப எல்லைகள் வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூங்கிலாறு மணல் செயற்திட்டத்தின் 5,897 கனசதுர மணலின் விற்பனை வருமானம் ரூபா 12,090,737 தொகையொன்றாகக் காணப்பட்டிருந்த போதிலும், அது ரூபா 11,889,359 தொகையொன்றாகக் குறிப்பிடப்பட்டிருந்ததன் காரணமாக அந்த வருமானம் ரூபா 201,378 தொகையொன்றினால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) புவிச்சரிதவியல் மற்றும் சுங்கப் பணியகத்திற்கு இணக்கப்பட்டு அவர்களின் சேவைக் காலப்பகுதி 05 வருடங்களினை மிகைத்திருந்த கம்பனியின் அந்த ஊழியர்களுக்கு ரூபா 106,250 தொகையான பணிக்கொடை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) சேவையாற்றிய மொத்த வருடங்களின் எண்ணிக்கைக்கு பணிக்கொடையினை கணிப்பிடுவதற்கு பதிலாக சேவையாற்றிய வருடங்களின் எண்ணிக்கைக்கு ஆமலதிகமாக மாதங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பணிக்கொடை கணிப்பிட்டதன் காரணமாக ரூபா 556,253 தொகையொன்றினால் பணிக்கொடைக்கான ஏற்பாடு மிகையாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) இறப்புக்களினை மதிப்பிடுகையில் சாக்குகளில் நிரப்பப்பட்ட மணல் மற்றும் வெற்று சாக்குகளினை கருத்திற்கொள்ளாமையின் காரணமாக 28 ஆவது மைக்கல் மணல் விற்பனைகள் நிலையத்தின் இறுதி இருப்புக்கள் மீதி ரூபா 278,444 தொகையொன்றினால் குறைத்துக்குறிப்பிடப்பட்டிருந்தது.

(உ) வரி வருமானத்தின் பகுதியொன்றாக தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியினை கணக்கிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக, ரூபா 3,900,229 தொகையான வருமானம் மற்றும் ரூபா 1,092,064 தொகையான செலுத்த வேண்டியவை வரி குறைத்துக்குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஊ) தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மாற்றத்தினால் வருமானத்தின் குறைக் கணக்கீட்டு காரணமாக மற்றும் மீளமைக்கப்பட்ட விகிதத்தினை கருத்திற்கொள்ளாமையின் காரணமாக பொருளாதார சேவைக் கட்டணங்கள் பொறுப்பு ரூபா 1,337,854 தொகையொன்றினால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(எ) வருமான வரிக்கு எதிரீடு செய்ய முடியாத முன்னைய ஆண்டுகளில் செலுத்தப்பட்ட ரூபா 262,860 தொகையான பொருளாதார சேவைக் கட்டணங்கள் பெற வேண்டிய மீதியொன்றாக கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(எ) வருமான வரியினைக் கணிப்பிடுகையில் மூலதன படி விகிதங்களினை மோசடியாகப் பயன்படுத்தியதன் காரணமாக செலுத்த வேண்டிய வருமான வரி ரூபா 448,992 தொகையொன்றினால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஐ) 04 ஆவது காலாண்டிற்கு கணிப்பிடப்பட்ட வருமான வரி அட்டுறு வருமான வரியாக மற்றும் கீழ்கொண்டு சென்ற செலுத்தப்பட்ட வருமான வரியாக கணக்குகளில் பதிவிட்டதன் காரணமாக ஆண்டிற்கான வருமான வரிப் பொறுப்பு மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 404,943 தொகையொன்றினால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீளாய்வாண்டுடன் தொடர்புடைய ஊழியர் சேமலாப நிதியின் பங்களிப்பு மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியின் பங்களிப்பு ரூபா 10,536,165 மற்றும் ரூபா 2,634,041 தொகைகளாகக் காணப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் முறையே ரூபா 9,555,562 மற்றும் ரூபா 2,385,932 தொகைகளாக பங்களிப்புக்கள் குறிப்பிடப்பட்டிருந்தமையின் காரணமாக ரூபா 981,603 மற்றும் ரூபா 248,109 வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊதியத்தின் சேமலாப நிதிச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு | (i) சேமலாப நிதிகளினை கணிப்பிடுகையில் ஊழியர்களின் சேவையிலிருந்து பெறப்பட்ட மொத்த உழைப்புக்கள் கருத்திற்கொள்ளப்பட்டபோதிலும், மன்னம்பிட்டிய மணல் அகழ்வுச் செயற்திட்டத்தின் ஊழியர்களுக்கு மாதந்தம் அகழப்பட்ட முதல் 15 கன சதுர மணலுடன் தொடர்புடைய உழைப்புகளுக்கு மாத்திரம் சேமலாப நிதிகள் கணிப்பிடப்பட்டிருந்தது. |
| | (ii) ஊழியர் ஒருவருடன் தொடர்புடைய அவரின் ஊழியத்தின் தொழிற் காப்பீட்டின் காலப்பகுதிக்குள் நிதியத்திற்கான பண பங்பளிப்பு செலுத்துகை செயற்பாடுகள் பிணைப்படுத்தப்பட வேண்டிய போதிலும், மன்னம்பிட்டிய மணல் அகழ்வுச் |

| | | |
|---|---|---|
| | | செயற்திட்டத்தின் ஊழியர்களில் ஒரு பகுதியினர் மாத்திரம் ஊழியர் சேமலாப நிதிக்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கு பங்களிப்புச் செய்திருந்தனர். மேலும், பொலநறுவை மாவட்டத்திலுள்ள ஏனைய 05 மணல் அகழ்வுச் செயற்திட்டங்களுக்கு இணைக்கப்பட்ட அனைத்து ஊழியர்களும் ஊழியர் சேமலாப நிதிக்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கு பங்களிப்புச் செய்திருக்கவில்லை. |
| (ஆ) | 2003 யூன் 02 இன் பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) | 5.2 ஆம் பந்தி | பாதிடப்பட்ட நிதிநிலைமைக் கூற்றுடன் பாதீடு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 5.1.3 ஆம் பந்தி | பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பாதிட்டின் பிரதிகள் தொடர்புடைய வரிசை அமைச்சிற்கு, பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு, திறைசேரிக்கு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2016 திசெம்பர் 16 இன் பீஈடீ 05/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் உறுப்புரைகளின் பிரகாரம், மிகை ஊதிய செலுத்துகையினை மேற்கொள்வற்கு முன்னர் ஆண்டிற்கான இலாபம் இனங்காணப்பட வேண்டிய போதிலும், அந்த ஏற்பாட்டிற்கு முரனாக 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வேலைநாட்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் 2017 சனவரி 17 இல் ஒவ்வொரு ஊழியருக்கும் ரூபா 13,500 தொகையொன்றான ரூபா 1,263,064 மொத்தத் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் தேறிய இலாபம் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 2,891,974 தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 44,976,120 தொகையாக காணப்பட்டமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 42,084,146 ஆன முன்னேற்றத்தினை சுட்டிக்காட்டுகின்றது. செயற்திட்டங்களிலிருந்தான வருமானம் ரூபா 57,425,956 தொகையொன்றினால் அதிரித்தமை மற்றும் தொழிற்பாடற்ற வருமானம் ரூபா 2,707,900 தொகையொன்றினால் அதிகரித்தமை மேற்குறித்த நிதிசார் விளைவுகளின் முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாகக் காணப்பட்டன.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

கம்பனியின் அகழப்பட்ட மணல் மற்றும் மணல் விற்பனையின் செயற்திட்டங்களின் முக்கிய மற்றும் செயற்பாடுகள் மணற் சந்தையினை நோக்கிய தாக்கம் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பொலநறுவை மாவட்டத்தில் வெள்ளத்தினைக் கட்டுப்படுத்துதல் மற்றும் ஏனைய மாவட்டங்களில் மணல் பற்றாக்குறையினை நீக்கும் நோக்கங்களுடன் 2008 ஆம் ஆண்டில் மன்னம்பிட்டிய பிரதேசத்தில் மணல் அகழ்வதற்கு கம்பனிக்கு உயர்நீதிமன்றத்தினால் அனுமதியழிக்கப்பட்டிருந்தது. அந்த நீதிமன்ற தீர்ப்புக்கு முரணாக, 2016 யூலை 25 இலிருந்து பொலநறுவை, மாவட்ட இணைப்புக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமொன்றின் அடிப்படையில் பொலநறுவை மாவட்டத்திற்கு வெளியில் மணலின் போக்குவரத்து கைவிடப்பட்டிருந்தது. மன்னம்பிட்டிய மணல் செயற்திட்டத்தின் கீழ் மணலின் விநியோகம் குறைவடைந்தமை காரணமாக ஏனைய மாவட்டங்களில் மணல் பற்றாக்குறையொன்று நேரிட்டிருந்ததுடன் மணலின் சந்தை விலையில் அதிகரிப்பு இருந்தும் அது ஒரு காரணமாகக் காணப்பட்டிருந்தது.

(ii) மன்னம்பிட்டிய பாலத்தின் தாழ் பிரதேசத்திலுள்ள ஆற்றில் 02 கிலோமீற்றர் இடைவெளியொன்றில் மணல் அகழ்வதற்கு வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தபோதிலும், சோமாவதி மற்றும் பொலநறுவைப் பிரதேசங்களில் அந்தப் பிரதேசத்திலிருந்து அகழப்பட்ட மணல் அல்லாத பாரியதொரு வெற்று மணலினால் ஆற்றின் ¾ பகுதி முன்கடிக்கப்பட்டிருந்தமை மீதான வெள்ள நிகழ்வு கம்பனியினால் கட்டுப்படுத்த முடியாதிருந்தது.

(iii) மணல் செயற்திட்டங்களுக்கு பாரியதொரு எண்ணிக்கையிலான ஊழியர்கள் பதிவுசெய்யப்பட்டிருந்த போதிலும், சேவையில் 30 சதவீதமான தாழ்ந்ததொரு எண்ணிக்கையான நபர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை காரணமாக மற்றும் பொதுமையற்ற கணக்காய்வு செயற்பாடுகள் காரணமாக மற்றும் தேவை மற்றும் இலக்குகளினை விட சந்தைக்கான விநியோகம் கூட மிகையாகக் குறைவடைந்திருந்தமையினால் மணல் உற்பத்தி குறைவடைந்திருந்தது.

(iv) கம்பனியினால் அமுல்படுத்தப்பட்ட மன்னம்பிட்டிய உள்ளடங்களாக பொலநறுவை மாவட்டத்திலுள்ள மணல் செயற்திட்டங்களினால் வெளியிடப்பட்ட மணலின் தொகையில் தளம்பல்கள் காணப்பட்டதுடன் ஒரு கனசதுர மணலுக்கான கம்பனியின் கிரயம் சந்தையில் மணலுக்கான விலையினை தீர்மானிக்கையில் முக்கியமாக தாக்கமளித்திருந்தது. ஆகையினால், புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம், இலங்கை மகாவலி அதிகாரசபை, வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், ஆறு வங்கிகள் மற்றும் மணல் அகழ்வுப் பாதை மற்றும் ஒரு கணசதுர மணலின் அகழ்வு கிரயத்திற்கும் மேலதிகமாக சமூகப் பொறுப்புக்களினை நிறைவேற்றுவதற்கான பொலநறுவை அபிவிருத்தி நிதியத்திலிருந்தான பல்வேறு கட்டணங்கள் காரணமாக ரூபா 4,100 தொகையொன்றிலிருந்து ரூபா 4,450 வரையான தொகையொன்று வரையான வீச்சில் உயர் மட்டமொன்றில் ஒரு கனசதுர மணலின் விலை தொடர்ந்திருந்த போதிலும், கம்பனியினால் விலைக் கட்டுப்பாட்டினை நோக்கியதாக கவனஞ்செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) உயர் நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் மன்னம்பிட்டிய மணல் செயற்திட்டத்தினால் கொழும்பு மற்றும் ஏனைய பிரதேசங்களிலுள்ள மணல் பற்றாக்குறையினை நீக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், பொலநறுவையில் அமைந்துள்ள 03 கம்பனிகளுக்கு அகழப்பட்ட மணலில் பாரிய தொகையான மணல்

விநியோகிப்பட்டிருந்ததுடன் எவ்வகையாக செயற்பாடுகளுக்கு மணல் பயன்படுத்தப்பட்டது என்ற விபரங்களினைக் கம்பனி கொண்டிருக்கவில்லை.

### 4.2 நோக்கங்களுக்கு முரணான கொடுக்கல் வாங்கல்கள்

கம்பனி ஸ்தாபிப்பின் நோக்கங்களுக்கு முரணாக ரூபா 9,025,000 தொகையொன்றை செலவழிப்பதன் மூலம் மணல் போக்குவரத்திற்கு இரண்டு டிப்பர் வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

### 4.3 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஒக்தோபர் 31 ஆன கணக்காய்வு திகதி வரையேனும் வெல்லவாய கொடிஹம்பொக்க பளிங்கு வைப்பு அகழ்வு செயற்திட்டத்தின் அகழ்வு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் பளிங்குகளினை களஞ்சியப்படுத்துவதற்கு காணியொன்றை குத்தகைக்கு எடுப்பதற்கு, பாலங்களின் அளவினை ஸ்தாபிப்பதற்கு, பாதுகாப்பு செயற்பாடுகளினை பராமரிப்பதற்கு மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்கு மீளாய்வாண்டில் ரூபா 6,327,849 தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும், அவற்றுக்கு எவ்வித வருமானமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மணல் போக்குவரத்தின் எழுத்து மூல அனுமதிப்பத்திரங்கள் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தினால் விநியோகிக்கப்பட்டு அந்தப் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், சேவையில் 16 ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், பொலநறுவையிலுள்ள சுரங்க மணல் நிலையங்களில் எழுத்து மூலமான மணல் போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களுக்கு கம்பனியினால் சம்பள செலுத்துகைகள் மேற்கொள்ளப்பட்டது.

(இ) அறலஹன்வில மணல் அகழ்வு செயற்திட்டத்தில் அகழப்பட்ட மணல் மற்றொரு இடத்தில் களஞ்சியப்படுத்துவதன் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டிய போதிலும், அதற்கு வியாபார அனுமதிப்பத்திரமொன்று பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு இடர்க் கடன்கள் மற்றும் ஏனைய முற்பணங்கள் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் கம்பனியின் ஊழியர்களுக்கு மற்றும் மன்னம்பிட்டிய மணல் அகழ்வுச் செயற்திட்டத்தின் ஊழியர்களுக்கு ரூபா 1,304,500 தொகையான இடர்க் கடன்கள் மற்றும் ஏனைய முற்பணங்கள் விநியோகிக்கப்பட்டதுடன், அந்த வகையில் அவர்களின் சேவையிலிருந்து விலகியிருந்த அந்த ஊழியர்கள் காரணமாக அது அறவிடமுடியாதிருந்தது.

### 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நீர்ப்பாசன திணைக்களத்திற்குச் சொந்தமான மூங்கிலாறு ஓயாவின் மீள்நிர்மாணத்தின் ஓடையிலிருந்து அகற்றப்பட்ட 20,000 கனசதுர மணலினை அகற்றுவதற்கு கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் பிராந்திய பொறியியலாளரின் புலனாய்வு அறிக்கையின் பிரகாரம் மணல் இருப்பு 20,000 கனசதுர மணலினைக் உள்ளடக்கியிருந்த போதிலும், விற்பனைகள் அறிக்கைகளின் பிரகாரம், 5,897 கனசதுர மணலுடன் தொடர்புடைய வருமானம் ரூபா 11,889,359 தொகையொன்று மாத்திரம் கம்பனிக்கு

பெறப்பட்டிருந்தது. மீதமாகவுள்ள ரூபா 28,915,633 பெறுமதியான 14,103 கனசதுர மணல் நீக்கப்பட்டிருந்த போதிலும், அதனுடன் தொடர்புடைய அவற்றுக்கான எவ்வித வருமானம் கம்பனிக்கு பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) ஓடையின் புனர்நிர்மாணம் மேற்கொள்ளப்பட்ட, ஓடையிலிருந்து அகற்றப்பட்ட மணல் ஒப்பந்தக் கம்பனிக்கு சொந்தமானதாகக் காணப்படாதிருந்த போதிலும், கம்பனியினால் 5,897 கனசதுர மணலுக்கு ஒப்பந்தக் கம்பனிக்கு ரூபா 5,897,000 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(iii) மணலினை விற்பனை செய்வதற்காக கம்பனிக்கு விநியோகிக்கப்பட்ட வியாபார அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடி காலப்பகுதி 2016 ஏப்ரல் 28 இல் முடிவடைந்திருந்த போதிலும், அந்த திகதிக்குப் பின்னரும் செல்லுபடியான அனுமதிப்பத்திரமொன்று இன்றி கம்பனியினால் 1,539 கனசதுர மணல் விற்பனை செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பொலநறுவை மணல் செயற்திட்டத்தின் மணலின் சில்லறை விலை, மணலின் விநியோகம், டிப்பர் வாகனங்கள் கொள்வனவு, ஊழியர்களின் சம்பளங்கள் போன்ற செயற்பாடுகள் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக, பொலநறுவை, மாவட்ட செயலக அலுவலகத்தில் நடாத்தப்பட்ட கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் கம்பனி நடவடிக்கை எடுத்திருந்தது.

## 4.5 மனித வளங்கல் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனி ஸ்தாபிப்பிலிருந்து 16 வருடங்கள் கடந்திருந்த போதிலும், 2003 யூன் 02 இன் பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திட்டம் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு மற்றும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பனியின் ஸ்தாபிப்பிற்கான அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் உள்ளடங்கலாக 05-06 உத்தியோகத்தர்களினை கம்பனியின் பதவியணியினர் கொண்டிருக்க வேண்டியதுடன் கம்பனியினால் செயற்படுத்தப்படும் செயற்திட்டங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படல் வேண்டும். எவ்வாறாயினும் அதற்கு முரணாக ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த செயற்திட்டங்களின் 86 ஊழியர்கள் உள்ளடங்கலாக கம்பனியின் முழுமையான பதவியணியினர் 126 இனைக் கொண்டிருந்தது.

(இ) கம்பனியின் செயற்பாடுகள் மற்றும் கடமையினை செயல்படுத்துவதற்கு கம்பனியில் அனுபவம் வாய்ந்த மற்றும் போதுமான பதவியணியினரொன்று காணப்பட்ட போதிலும், புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் 07 உத்தியோகத்தர்களின் கோவையினைப் பெற்றுக்கொள்வதன் மூலம் மீளாய்வாண்டில் ரூபா 415,000 தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தினால் முறையற்ற வகையொன்றில் தெரிவுசெய்யப்பட்ட நபர்களுக்கு கம்பனியினால் ஒப்பந்த அடிப்படையில் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பணியகத்தில் பல்வேறு பதவிகளிலுள்ள சேவைக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் அவ்வாறான வகையில் சேவைக்கு அனுப்பப்பட்டிருந்த ஊழியர்கள் 107 அகக் காணப்பட்டது.

**4.6 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

2009 ஆம் ஆண்டில் ரூபா 8,883,520 தொகையொன்றுக்கு மணல் ஏற்றதலுக்கு ஏற்றும் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டதுடன் மன்னம்பிட்டிய மணல் செயற்திட்டத்திற்கு பயன்படுத்தப்படுகின்றது. 2012 ஆம் ஆண்டிலிருந்து மணல் ஏற்றுகைக்கு பயன்படுத்தப்படாது தளத்தின் சிறிய வேலைக்கு இந்த இயந்திரம் பயன்படுத்தப்படுகின்றதுடன் மணல் ஏற்றுகைக்கு குத்தகை அடிப்படையில் வெளித்தர்பினர்களிடமிருந்து எற்றும் இயந்திரங்கள் பெறப்பட்டிருந்தது.

**4.7 ஏனைய அரச நிறுவகங்களுக்கு வழங்கப்பட்ட கம்பனியின் வளங்கல்**

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரதி அமைச்சரின் அலுவலக செயற்பாடுகளுக்கு அனுப்பட்ட இரண்டு எழுதுவினைஞர்கள் மற்றும் இரண்டு அலுவலக உதவியளார்களுக்கு மீளாய்வாண்டில் கம்பனியினல் சம்பளங்கள் ரூபா 1,095,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனிக்கு கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 இன் 01/2014 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 உள்ளகக் கணக்காய்வு**

கணக்காண்டு ஆரம்பிப்பதற்கு முன்னர் உள்ளகக் கணக்காய்வு திட்டத்தினை தயாரிப்பதற்கு மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் செயற்திட்டங்கள் உள்ளடங்களாக முக்கிய விடயப்பரப்புக்கள் உள்ளடங்களாக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. புவிச்சரிதவியல் மற்றும் சுங்கப் பணியகத்தின் உள்ளகக் கணக்காய்வாளர் உள்ளகக் கணக்காய்வாளராக நியமிக்கப்பட்டிருந்த போதிலும், போதுமானதொரு உள்ளகக் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையொன்றில் பதவியணியினரொன்றும் ஏனைய வசதிகளும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**5.4 பாதீட்டு முரண்கள்**

கம்பனியின் பாதிடப்பட்ட மற்றும் உண்மை கணக்குகளுக்கிடையே 11 சதவீதம் தொடக்கம் 866 வரையான வீச்சில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையினால், பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

**5.5 சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பொறுப்புக்களின் அடைதல்**

வெளிகந்த மணல் சுரங்க செயற்திட்டத்தின் கீழ் மணல் சுரங்கம் மேற்கொள்ளப்பட்ட, அந்த இடங்களில் ஆறு வங்கிகளின் பாரிய அளவிலான அரிப்பு காரணமாக மற்றும் அந்த இடங்களில் மரங்களின் விழுகை காரணமாக மாதுரு ஓயாவின் சில இடங்களில் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் கட்டளையினால் சுரங்க மணல் நிரப்பப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தினால் அறிவிக்கப்பட்டவாறு,

சேதமடைந்த ஆறு வங்கிகளினை புனரமைப்பதற்கு கம்பனியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (i) | வாகனங்களின் கட்டுப்பாடு | வாகன ஓட்ட அட்டவணைகளினை முறையாகப் பேணப்படாமை |
| (ii) | மனித வளங்கள் முகாமைத்துவம் | (அ) மனித வளங்கள் முகாமைத்துவம், ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டங்களினை நோக்கி கவனஞ்செலுத்தாமை. |
| | | (ஆ) பிராந்திய நிலையங்களில் கடமையின் வகுப்பீடு, வருகை மற்றும் வெளியேறுகை, லீவு மற்றும் குறுகிய லீவுப் பதிவேடுகள் முறையாக வெளிப்படுத்தப்படாமை. |
| (iii) | சொத்துக்கள் கட்டுப்பாடு | பிராந்திய நிலையங்களில் சொத்துக்களின் பதிவேடுகள் முறையாகப் பேணப்படாமை |
| (iv) | நிதிசார் கட்டுப்பாடு | (அ) காசோலைகள் மூலம் மேற்கொள்ளக்கூடிய செலுத்துகைகளுக்கு சில்லறை காசு மூலம் செலுத்துகைகளினை மேற்கொள்ளுதல். |
| | | (ஆ) பிராந்திய நிலையங்களினால் சேகரிக்கப்பட்ட பணத்தை தாமதமின்றி பாதுகாப்பாக வைப்பதற்கு மற்றும் வங்கியிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |